## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் (''ஆணைக்குழு'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் உள்ளிட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது தகவல்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையிலுள்ள நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முடியுமான அளவிற்கு பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பு மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் நோக்கில் ஆணைக்குழுவின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க ஆணைக்குழு செயற்பட்டுள்ளதா எனவும்,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும்.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, ஆணைக்குழுவின் செயற்பாடுகள், வருமானத்துக்கு மிகையான செலவினத்துக்காக செஸ் நிதியத்திலிருந்து மாற்றீடு செய்யப்பட்ட தொகையினை கணக்கிலெடுப்பதற்கு முன்னர் ரூபா 446.6 மில்லியன் பற்றாக்குறையை ஏற்படுத்தியிருந்ததுடன் முன்னைய ஆண்டின் நிதிப் பற்றாக்குறை ரூபா 331.2 மில்லியன் ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பற்றாக்குறை ரூபா 115.4 மில்லியன் அல்லது 34.8 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கான முக்கியக் காரணம், மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் நிர்வாக மற்றும் தாபனச் செலவினமும் ஆளனிக் கிரயமும் முறையே ரூபா 56.2 மில்லியன் மற்றும் ரூபா 81.1 மில்லியன் அதிகரித்தமையே ஆகும்.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஆணைக்குழுவின், முக்கிய வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2023 | 2022 | வேறுபாடு சதவிகிதத்தில் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| **ஆணைக்குழுவின் வருமானம்** | | | |
| கல்வி நிகழ்ச்சித்திட்டம் | 11,629,061 | 8,671,966 | 34.0 |
| அரசாங்க மானியம் (FSMP) | 176,438,871 | 172,252,739 | 2.4 |
| **ஆணைக்குழுவின் செலவினம்** | | | |
| பதவியணியினர் சம்பளம் | 202,907,059 | 160,983,569 | 26.0 |
| பதவியணியினர் நலன்புரி மற்றும் ஏனைய பதவியணியினர் கொடுப்பனவுகள் | 49,696,830 | 37,965,470 | 30.9 |
| வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் பிரயாணங்கள் | 13,522,257 | 7,081,485 | 90.9 |
| வாடகை மற்றும் வாகன நிறுத்தக வாடகை | 140,069,454 | 110,895,458 | 26.3 |
| மூலதனச் சந்தை அபிவிருத்தி, வெளிவாரி உறவுகள், மூலதனச் சந்தைக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புலனாய்வுச் செலவினம்- மொத்தம் | 36,029,791 | 50,328,063 | (28.4) |
| • மூலதனச் சந்தையும் உற்பத்திப்பொருள் அபிவிருத்தியும் | 0 | 19,050,659 | (100.0) |
| • பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 21,773,762 | 10,278,137 | 111.8 |
| • கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | 1,959,364 | 1,678,495 | 16.7 |
| • பிரச்சாரம் மற்றும் விளம்பரம் | 0 | 147,015 | (100.0) |
| • சந்தை ஆராய்ச்சிக் கிரயம் | 5,278,991 | 11,820,060 | (55.3) |

அ உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்ட நிதித்துறை நவீனப்படுத்தல் செயற்திட்டத்தின் (FSMP) ஒரு பகுதியாக, ஏறத்தாழ ஐக்கிய அமெரிக்க டொலர் 10 மில்லியன் தொகையை ஆணைக்குழு பெற தக்கதாக உள்ளதுடன் இதில் பெறுபேற்று அடிப்படை நிதியுதவியின் ஒரு பகுதியாக ஐக்கிய அமெரிக்க டொலர் 2 மில்லியன் மற்றும் முதலீட்டு அடிப்படையிலான நிதியுதவியின் ஒரு பகுதியாக ஐக்கிய அமெரிக்க டொலர் 8 மில்லியன் உள்ளடங்கியுள்ளது. மீளாய்வாண்டின் இறுதியில், செயற்திட்டத்தின் பெறுபேற்று அடிப்படையிலான நிதியுதவியின் ஒரு பகுதியாக ரூபா 533.39 மில்லியனை (2019 இல் ரூபா 81,124,254, 2020 இல் ரூபா 11,720,560, 2021 இல் ரூபா 104,804,128 மற்றும் 2022 இல் ரூபா 171,674,294, 2023 இல் ரூபா 164,073,632) மொத்தமாக ஆணைக்குழு பெற்றது. மேலும், FSMP இன் முதலீட்டு அடிப்படையிலான நிதியுதவியின் கூறுகளின் கீழ், அடையாளம் காணப்பட்ட பொருட்கள் மற்றும் ஆலோசனை சேவைகளை வாங்குவதற்கும் மற்றும் பணியாளர்களின் திறனை வளர்ப்பதற்கும் ஆணைக்குழுவிற்கு நிதி வழங்கப்பட்டது. திட்டம் மூடப்பட்டபோது, உலக வங்கி 519,059.54 அமெரிக்க டாலர்களை (ரூ. 163,324,066.66) ஆணைக்குழுவிற்கு வழங்கியது.

ஆ. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் எந்தவொரு மூலதனச் சந்தை மற்றும் உற்பத்திப் பொருள் அபிவிருத்திச் செலவுகள் செய்யப்படாததுடன் முந்தைய ஆண்டில் அதற்காக ரூபா 19.05 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டில அதாவது மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான பொதுமக்கள் விழிப்புணர்வு திட்டச் செலவு ரூபா 21.77 மில்லியன் ஆனதுடன் அது முந்தைய ஆண்டில் ரூபா 10.28 மில்லியன் ஆகக் காணப்பட்டமையால் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ரூபா 11.49 மில்லியன் அல்லது 111.8 சதவீதம் அதிகரித்திருந்தது.

இ. 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் (SEC சட்டம்) பிரிவு 156 இன் படி, பிணையங்கள் சந்தையை மேம்படுத்தும் நோக்கத்திற்காக, ஆணைக்குழுவின் முகாமை, நிர்வாகம் மற்றும் செயல்பாடுகளால் ஏற்படும் அனைத்து செலவினங்களையும் பூர்த்தி செய்யவும் ஆணைக்குழுவின் செயல்பாடு, மற்றும் அதன் கடமைகள் மற்றும் பிற நோக்கங்களை நிறைவேற்றுதல் நோக்கத்திற்காகவும் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட செஸ்ஸைப் பயன்படுத்துவதற்கு இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஆணைக்குழுவின் செலவுகளுக்காக ரூபா 446.66 மில்லியன் செஸ் நிதியிலிருந்து மாற்றப்பட்டது. ஆணைக்குழுவின் மொத்த செலவு ரூபா 665.58 மில்லியன் ஆனதுடன் மூலதன சந்தை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தின் போது எந்தவொரு செலவினமும் செலவிடப்படவில்லை. எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் படி, ஆணைக்குழு மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் மூலதனச் சந்தை மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக ரூபா 3,000,000 ஒதுக்கியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 ஆணைக்குழுவால் விசாரணைகளை நடாத்துதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பிரிவு 16(ஆர்) இன் படி, ஆணைக்குழுவானது சந்தை நிறுவனம், சந்தை இடைத்தரகர், பதிவுசெய்யப்பட்ட நபர், பட்டியலிடப்பட்ட பொது கம்பனி, பட்டியலிடப்பட்ட வெளிநாட்டு நிறுவனம் ஆகியவற்றின் எந்தவொரு நடவடிக்கையையும் விசாரித்து விசாரணைகளை நடத்த வேண்டும். மேலும், SEC சட்டத்தின் பிரிவு 16(எஸ்) இன் படி, SEC சட்டத்தின் விதிகள் அல்லது ஏதேனும் விதிமுறைகள் அல்லது எந்த விதி அல்லது உத்தரவு அல்லது அதன் கீழ் கொடுக்கப்பட்ட ஏதேனும் அறிவுறுத்தல்களின் மீறல்கள் அல்லது மீறல்கள் குறித்தும் ஆணைக்குழு அவசியமாகக் கருதுகின்ற எந்தவொரு நபராலும் மற்றும் SEC சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட எந்தவொரு அமுலாக்க நடவடிக்கைகள் குறித்தும் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொள்ளும். கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2022 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து 62 விசாரணைகள் (விசாரணைகளின் 5 துணை விடயங்கள் உட்பட) மேற்கொள்ளப்பட்டதுடன், 2023 ஆம் ஆண்டில் 24 புதிய விசாரணைகளைத் தொடங்குவதற்கு | ஆணைக்குழுவின் புலனாய்வுப் பிரிவு 2023 ஆம் ஆண்டில் 86 விசாரணைகளை நடத்தியதுடன் 2023 டிசம்பர் 31 இல் 26 விசாரணைகளை முடித்துள்ளது. அதன்படி, 2023 டிசம்பர் 31 ஆம் தேதி வரை 60 விசாரணைகள் நடந்து கொண்டிருந்தன. ஆணைக்குழுவானது வரிசைப்படி ஆண்டு விசாரணை செயல்முறையை விரைவுபடுத்தியது. மேற்கூறிய விசாரணைகளை முடிப்பதற்காக | விசாரணை செயல்முறையை மேலும் விரைவுபடுத்த வேண்டும். |

ஆணைக்குழு தீர்மானித்தது. 2024 ஜூன் 30 ஆம் தேதி வரை விசாரணைகளின் முன்னேற்றம் பின்வருமாறு.

| விசாரணையின் தன்மை | 2023 இல் நடத்திய மொத்த விசார ணைகள் | 2024 இல் கிடைத்த முறைப் பாடுகள் | 2024 யூன் 30 இல் விசாரணைகளின் நிலைமை | | |
|---|---|---|---|---|---|
| | | | நடத்திய விசாரணைகளின் எண்ணிக் கை | ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்த அறிக்கை மற்றும் மேலதிக விசாரணைக்கான பரிந்துரைகள் அல்லது மேலதிக விசாரணை | இடம்பெற்று வரும் விசார ணைகள் |
| உள்ளக கையாளுகை | 26 | 2 | 14 | 8 | 6 |
| சந்தை முறைகேடுகள் | 42 | - | 30 | 4 | 8 |
| சந்தை முறைகேடு / உள்ளகக் கையாளுகை | 4 | - | 1 | 2 | 1 |
| முன்னனி நடவடிக்கை | 6 | - | 5 | 1 | - |
| உள்ளகக் கையாளுகை / முன்னனி நடவடிக்கை | 1 | - | - | 1 | - |
| முன்னனி நடவடிக்கை / ஏதேனும் சந்தை மோசடி | 1 | - | 1 | - | - |
| சந்தை முறைகேடு மற்றும் தரகு விதிகளை மீறுதல் | 1 | - | 1 | - | - |
| 132(அ) பிரிவின் கீழான சந்தை மோசடி | 1 | - | - | - | 1 |
| கையகப்படுத்தல் மற்றும் இணைத்தல் குறியீடு | 1 | - | - | 1 | - |
| SEC சட்டம் மற்றும் விதிகளை மீறுதல் | 1 | - | 1 | - | - |
| சந்தை தவறுகள் | 1 | 1 | 1 | - | 1 |
| சந்தை மோசடி/ முன்னனி நடவடிக்கை | 1 | - | 1 | - | - |
| மொத்தம் | 86 | 3 | 55 | 17 | 17 |

விசாரணைகள் மற்றும் அமுலாக்கத்திற்கான மேற்பார்வைக் குழுவை நியமிப்பது உட்பட பல நடவடிக்கைகளைத் தொடங்கியது. இதன் விளைவாக, 2024 ஜூன் 30 நிலவரப்படி 86 விசாரணைகளில் 55 விசாரணைகளை ஆணைக்குழுவால் முடிக்க முடிந்தது. மேலும், 17 விசாரணைகள் தொடர்பான அறிக்கைகள் மேலதிக ஆய்வுக்காக விசாரணைப் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், 2024 யூன் இறுதியில் 17 விசாரணைகள் புலனாய்வுப் பிரிவினால் நடத்தப்பட்டு வருகின்றன.

2024 ஜூன் 30 இல் நிலுவையில் உள்ள 17 விசாரணைகளில், ஐந்து விசாரணைகள் 2023 க்கு முன் தொடங்கப்பட்டனவாகும்.

(ஆ) 2023 ஜூலை 14 அன்று நடைபெற்ற 487 ஆவது ஆணைக்குழுவின் கூட்டத்தில் மூன்று உறுப்பினர்களை உள்ளடக்கிய விசாரணைக் கண்காணிப்புக் குழுவை நியமிக்க முடிவு செய்திருந்ததுடன் இக்குழு 2023 ஜூலை முதல் விசாரணைகள் மற்றும் அமுலாக்கத்திற்கான மேற்கூறிய மேற்பார்வைக் குழுவிற்கான ஒரு TOR அதன் ஒப்புதலுக்காக குழுவிற்கு TOR ஒன்று காணப்படுதல் வேண்டும்

| | | |
|---|---|---|
| 2024 மே வரையிலான காலகட்டத்தில் 13 முறை கூடியுள்ளது. இருப்பினும், அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகள் (TOR) அல்லது குழுவின் கூட்டங்கள் எவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படுகின்றன என்பதற்கான கட்டமைப்பு என்பன அவதானிக்கப்படவில்லை. | ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும். | |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) (i) ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் நிர்வாகப் பிரிவின் கீழ் 2024 ஜூன் 10 இல் உள்ளவாறு மூலதன சந்தை மேம்பாட்டு பணிப்பாளர், கண்காணிப்பு பணிப்பாளா, வெளிநாட்டு உறவுகள் பணிப்பாளர் பதவி, ஒன்பது உதவி பணிப்பாளர்களில் மூன்று பதவிகள், ஒன்பது சிரேஷ்ட முகாமையாளர்களில் நான்கு பேர், பதினாறில் நான்கு முகாமையாளர்கள், இருபத்தி இரண்டில் ஏழு பேர் சிரேஷ்ட உதவி முகாமையாளர்கள் மற்றும் 49 உதவி முகாமையாளர்களில் 24 பேர் உள்ளிட்ட பதிவகள் கணிசமான காலமாக வெற்றிடமாக உள்ளன. இந்த வெற்றிடங்கள் ஆணைக்குழுவின் வினைத்திறனான செயற்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது.<br><br>(ii) SEC சட்டத்தின்படி, இலங்கையில் பிணைப்பத்திரச் சந்தைகளை மேம்படுத்துவது என்பது ஆணைக்குழுவின் அதிகாரங்கள், கடமைகள் விளம்பரச் செயல்பாடுகளில் ஒன்றாகும். எவ்வாறாயினும், மூலதனச் சந்தை அபிவிருத்தி பணிப்பாளர் பதவிக்கு நிரந்தர ஊழியர் எவரும் நியமிக்கப்படாததுடன் 30.06.2024 இல் இருந்து 3 ஆண்டுகளுக்கும் மேலாக பதிற்கடமை அடிப்படையில் இச்செயற்பாடு கையாளப்படுகிறது. மேலும், 2022 செப்டம்பர் இற்குப் பின்னர் இந்தப் பதவியை நிரப்ப தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஆணைக்குழு கோரியிருக்கவில்லை.<br><br>(iii) உதவி முகாமையாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான விளம்பரம் 2024 ஜனவரி இல் வெளியிடப்பட்டிருந்த போதிலும், 2024 ஜூன் இறுதி வரை அந்த ஆட்சேர்ப்பு செய்யப்பட் டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு முதல் ஐந்து வருட காலத்திற்கு மேற்படி பதவியணியை ஆணைக்குழு அங்கீகரித்துள்ளது. மேற்கூறிய பெரும்பாலான காலியிடங்களை நிரப்ப ஆணைக்குழு விண்ணப்பங்களை கோரியதுடன் நேர்காணல்களை நடத்தியது. இந்தப் பதவிகளுக்கு ஏற்ற நபர்களை ஆணைக்குழுவால் கண்டறிய முடியவில்லை. பொருத்தமான விண்ணப்பதாரர்கள் அடையாளம் காணப்பட்டிருந்த சந்தர்ப்பங்களிலும் கூட, அத்தகைய விண்ணப்பதாரர்கள் முக்கியமாக அவர்களுக்கு வழங்கப்பட்ட குறைந்த சம்பளம் காரணமாக பதவிகளை ஏற்க முன்வரவில்லை. 2024 நிதியாண்டில் நிரப்புவதற்கு முக்கியமான ஐந்து முக்கிய பதவிகளை ஆணைக்குழு ஏற்கனவே அடையாளம் கண்டுள்ளது. இவற்றில் இரண்டு பணியிடங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டு, மீதமுள்ள மூவரை பணியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. மீதமுள்ளவை நிறுவனத்தின் தேவைகளின் அடிப்படையில் உரிய காலத்தில் நிரப்பப்படும். துணை பணிப்பாளர் நாயகம் அவர்கள் மூலதன சந்தை மேம்பாடு (CMD), வெளி உறவுகள் (ER), மற்றும் மூலதன சந்தை கல்வி (CME) பிரிவுகளை மேற்பார்வையிடுகிறார். | மீதமுள்ள முக்கிய பணியிடங்களை நிரப்ப வேண்டும். |

| | | |
|---|---|---|
| **(ஆ) பதிற்கடமை பணிப்பாளர் நாயக நியமனம்**<br>SEC சட்டத்தின் பிரிவு 19 (1) இன் படி, ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் அமைச்சர் ஆணைக்குழுவிற்குப் பணிப்பாளர் நாயகத்தை நியமிப்பதுடன், அவர் அதன் தலைமை நிர்வாக அதிகாரியாக இருப்பார். பணிப்பாளர் நாயகத்தின் ஊதியம் உட்பட வேலைக்கான நிபந்தனைகள் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும். மேலும் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 19(4) இன் படி, பணிப்பாளர் நாயகம், ஆணைக்குழுவின் ஒப்புதலுடன், அவ்வாறு செய்ய வேண்டும் என்று அவர் கருதும் போதெல்லாம், எந்தவொரு அதிகாரி மற்றும் பணியாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரம், செயல்பாடு அல்லது கடமைகளை வழங்கலாம் அல்லது இந்தச் சட்டத்தின் மூலம் அவருக்கு விதிக்கப்பட்ட அல்லது அவருக்கு ஒதுக்கப்பட்ட மற்றும் அத்தகைய அதிகாரி அல்லது பணியாள் பணிப்பாளர் நாயகத்தின் பொது அல்லது சிறப்பு வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு அத்தகைய அதிகாரம், செயல்பாடு அல்லது கடமையைப் பயன்படுத்துதல் மற்றும் அமுல்படுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், 2024 ஏப்ரல் 16 தேதியிட்ட பணிப்பாளர்-மனிதவள மற்றும் கட்டமைப்பு மாற்றத்தின் சுற்றறிக்கை இன் படி, ஆணைக்குழு, பணிப்பாளர் நாயகம் பதவியில் இல்லாததால், தனிப்பட்ட தேவை காரணமாக பதிற்கடமை பணிப்பாளர் நாயகத்தை நியமித்து, பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தின் பொறுப்புகளை நிறைவேற்ற அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் நாயகத்தை நியமிக்கும் அதிகாரம் அமைச்சருக்கு இருந்த போதிலும், இந்த நியமனம் தொடர்பாக அமைச்சரிடம் இருந்து எந்த ஒப்புதலும்/அனுமதியும் பெறப்படவில்லை. | ஏப்ரல் 2024 இல், ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் (டிஜி) திடீர் சுகவீனமுற்றதன் காரணமாக, அவரை மருத்துவமனையில் சேர்க்க வேண்டியிருந்தது. ஆணைக்குழுவின் செயல்பாட்டை பராமரிக்க, தற்காலிக டி.ஜி.,யை நியமிக்க முடிவு செய்யப்பட்டது. டி.ஜி.யின் நிச்சயமற்ற கால அவகாசம் காரணமாக, ஆணைக்குழு துணை பணிப்பாளர் நாயகத்தை பதிற்கடமை டி.ஜி.யாக தேர்வு செய்யக் காரணம் யாதெனில் அவர் அடுத்த மூத்த அதிகாரியாக காணப்பட்டமையாகும். இந்தச் சட்டம் இந்தச் சூழலை குறிப்பாகக் குறிப்பிடாததால், ஸ்தாபனச் சட்டத்திற்கு இணங்க இந்த முடிவு எடுக்கப்பட்டது. துணை பணிப்பாளர் நாயகத்தை தற்காலிக டி.ஜி ஆக நியமித்ததன் மூலம், டி.ஜி-யின் மருத்துவ விடுப்பின் போது அமைப்பின் சீரான செயல்பாடு உறுதி செய்யப்பட்டது. | அமைச்சரின் ஒப்புதலைப் பெற பரிந்துரைக்கிறோம். |
| **(இ) முகாமைத்துவ பயிலுனர்களை ஆட்சேர்ப்பு செய்தல்**<br>2023 ஜூலை இல் முகாமைத்துவப் பயிற்சியாளர்களை ஆட்சேர்ப்பு செய்ய ஆணைக்குழு விளம்பரம் செய்து, 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 10 பயிற்சியாளர்களை வேலைக்கு அமர்த்தியது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டுள்ளன.<br>(i) விளம்பரத்தின் படி, முகாமைத்துவப் பயிற்சியாளர்கள் தேர்வுச் செயல்முறையின் மூலம் தேர்வு செய்யப்படுவார்கள் என்று | ஆணைக்குழுவின் அனைத்து காலியிடங்களுக்கும் ஒரே மாதிரியான ஆட்சேர்ப்பு செயல்முறை பின்பற்றப்படுகிறது. சம்பளம், தேர்வுச் செயல்முறை மற்றும் கொடுப்பனவுகள் பொதுவாக விளம்பரத்தில் சேர்க்கப்படுவதில்லை. தேர்வு எழுதப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு | விளம்பரத்தில் தேர்வுச் செயல்முறை மற்றும் கொடுப்பனவுகளைச் சேர்க்க பரிந்துரைப்பதுடன் முகாமைத்துவ பயிற்சியாளர்களை உள்ளடக்கி SOR ஐப் புதுப்பிக்கவும். |

கூறப்பட்டிருந்தது. இருப்பினும், தேர்வு செயல்முறையின் விவரங்கள் (எழுத்துப்பரீட்சை தேர்வு மற்றும்/அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நேர்காணல்கள் போன்றவை) விளம்பரத்தில் குறிப்பிடப்படவில்லை. மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படும் கொடுப்பனவு தொகை விளம்பரத்தில் குறிப்பிடப்படவில்லை.

(ii) 13 ஜனவரி 2021 அன்று நடைபெற்ற அதன் 445வது கூட்டத்தில் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் (SOR) 01 ஜனவரி 2021 முதல் நடைமுறைக்கு வந்திருந்ததுடன் முகாமைத்துவ பயிற்சியாளர்களை ஆணைக் குழுவுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான வழிகள் அதில் காணப்படவில்லை.

(iii) 1,000 க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்ட பின்னர், வெளிக் கட்சியின் ஆதரவுடன் பொருத்தமான நபர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான ஆரம்ப கட்டமாக எழுத்துத் தேர்வை நடத்த ஆணைக்குழு முடிவு செய்தது. இருப்பினும், பதவிக்கு விண்ணப்பிக்கும் போது அது விண்ணப்பதாரர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை.

(iv) எழுத்துத் தேர்வு வெளி தரப்பினரால் நடத்தப்பட்டிருந்தாலும், தேர்வு வினாப்பத்திரங்கள் உள்ளக ரீதியில் தயாரிக்கப்பட்டிருந்தன.

மட்டுமே எழுத்துத் தேர்வு அறிவிக்கப்பட்டு, எழுத்துத் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்பட்டனர். பரீட்சை தாள் இலங்கை மூலதன சந்தை, வெளிநாட்டு மூலதன சந்தைகள், பொது அறிவு, IQ போன்ற கேள்விகளை உள்ளடக்கியது. தற்போதுள்ள SOR இப்போது முகாமைத்துவ பயிற்சியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான சேர்க்கையுடன் புதுப்பிக்கப்படுகிறது.

**(ஈ) ஒழுக்காற்று கோவையை நிறுவுதல்**

SEC சட்டத்தின் பிரிவு 20(4) இன் அடிப்படையில், ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்குப் பொருந்தக்கூடிய ஒழுக்காற்று விதிகளை ஆணைக்குழு நிறுவுதல் வேண்டும். உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களின் நடத்தை தொடர்பான தற்போதைய ஒழுங்குமுறை 1997 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் SEC சட்டத்திலுள்ள மேற்கூறிய குறிப்பைச் சேர்த்து இது புதுப்பிக்கப்படவில்லை.

கருத்துக்கள் குறிப்பிடப்பட்டதுடன் ஆணைக்குழு நடத்தை விதிகளின் ஸ்தாபனத்தை புதுப்பிக்கும் பணியில் உள்ளது.

தற்போதுள்ள ஒழுக்கக் கோவை திருத்தப்படுதல் வேண்டும்.

### 3.3 சேவை வழங்கனர்களுடன் சேவை மட்ட உடன்படிக்கையில் (SLA) கைச்சாத்திடுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சேவை ஒப்பந்தத்தின் செல்லுபடியாகும் காலத்தின் தொடக்கத் தேதிக்குப் பின்னர், பதினொரு (11) SLAகள் அந்தந்த சேவை வழங்குநர்களுடன் கணிசமான தாமதங்களுடன் கைச்சாத்திடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | SLA கையொப்பமிடுவதில் தாமதம் ஏற்பட்டாலும், அந்தக் காலகட்டத்தில் எந்தவொரு வழங்குனரிடமிருந்தும் சேவைத் தடங்கல்கள் ஏற்படவில்லை. SLA இன் காலாவதியின் போது, கணினி செயல்திறன்/அதிக நேரங்கள் பாதிக்கப்படாது என்பது உறுதிசெய்யப்படுகிறது. நடைமுறைக்கு வரும் தேதிகளில் அல்லது அதற்கு முன் SLAக்கள் கையொப்பமிடப்படுவதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்தங்கள் நடைமுறைக்கு வரும் தேதியில் அல்லது அதற்கு முன் SLA களில் கையெழுத்திட வேண்டும். |

### 3.4 பதவியணியனருக்கு அவர்களது பத்து மாதச் சம்பளத்துக்கு சமமான தொகையில் கடன்களை வழங்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஆணைக்குழு அதன் 485வது கூட்டத்தில், தற்போதுள்ள ஊழியர்களின் கடன் வசதியை நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பத்து மாதங்களின் மொத்த சம்பளம் அல்லது ரூபா 2,000,000 எது குறைவோ அதன்படி வழங்கத் தீர்மானித்தது. பணியாளர் கடன் வசதிக்கு தகுதி பெறுவதற்கான நோக்கங்களில் ஒன்று, ”பணிப்பாளர் நாயகத்தின் கருத்துப்படி நிதி உதவிக்கு தகுதியான பிற நோக்கங்கள்” ஆகும். எவ்வாறாயினும், நிதி உதவி வழங்குவதற்கான நிகழ்வுகளை பணிப்பாளர் நாயகம் எவ்வாறு தீர்மானிக்கிறார் என்பது பற்றிய விவரங்கள் மேற்கண்ட ஆணைக்குழவின் தீர்மானத்தில் குறிப்பிடப்படவில்லை. | குறிப்பிடப்பட்ட கருத்துகள் மற்றும் தகுதிக்கான அளவுகோல்கள் உடனடியாக மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். | தகுதி அளவுகோல் களை மறு பரிசீலனை செய்ய வேண்டும். |

### 3.5 பிணையங்கள் பரிவர்த்தனைகளின் சந்தை ஆராய்ச்சியை நடத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| SEC சட்டத்தின்படி, SEC சட்டத்தை மீறும் பரிவர்த்தனைகளைக் கண்டறிந்து தடுக்கும் நோக்கில், கொழும்பு பங்குச் சந்தையில் பிணைகள் பரிவர்த்தனைகளை ஆணைக்குழு கண்காணிக்கின்றது. கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2023 ஆம் ஆண்டில் ஆணைக்குழு 12 | ஆணைக்குழு பங்குத் தரகர்கள், முதலீட்டு ஆலோசகர்கள், இணக்க அதிகாரிகள் மற்றும் முதலீட்டாளர்களிடம் தொலைபேசி அழைப்புகள், கடிதங்கள் மற்றும் பல்வேறு சந்தேகத்திற்குரிய குற்றங்களுக்கான அறிக்கை பதிவுகள் மூலம் விளக்கங்களைக் | இலக்கு விலை நிர்ணயம், முதலீட்டு ஆலோசனை பற்றி சமூக ஊடக தளங்களில் பகிரப்படும் |

| | | |
|---|---|---|
| கண்காணிப்பு பரிந்துரைகளையும் ஒரு கண்காணிப்பு குறிப்பையும் உருவாக்கியுள்ளது. மேலும், பல்வேறு சமூக ஊடக தளங்களில் பகிரப்படும் தகவல்களை அதாவது இலக்கு விலை நிர்ணயம், முதலீட்டு ஆலோசனை போன்றவற்றைப் பற்றிய சமூக ஊடக தளங்களை ஆணைக்குழு கண்காணிக்கிறது. மேலும், ஆணைக்குழு அதன் பாதீட்டில் சந்தை கண்காணிப்பு மற்றும் ஆராய்ச்சிச் செலவுக்காக ரூபா 16,409,980 இனை மதிப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டில் ரூபா 5,278,991 அல்லது 32 சதவீதம் மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. | கோரியது.<br>இதன் விளைவாக, சமூக சூழலையும், நிலவும் சந்தை நிலைமைகளையும் கருத்தில் கொண்டு, தவறான நடத்தை தொடர்பாக சரியான நேரத்தில் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.<br>அதன்படி, அவதானிப்புகள் தொடர்பாக முதலீட்டாளர்களிட மிருந்து தொலைபேசி அழைப்புகள் மூலம் உடனடியாக விளக்கங்கள் கோரப்பட்டன, மேலும் சில அவதானிப்புகள் ”பொருத்தமற்ற உள்ளடக்கத்தை இடுகையிடுவதற்கு” SEC இன் அதிகாரப்பூர்வ Facebook / YouTube கணக்கு மூலம் தொடர்புடைய சமூக ஊடக தளங்களுக்கு தெரிவிக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டில், அடையாளம் காணப்பட்ட முதலீட்டாளர்களுக்கு ”எச்சரிக்கைகள்” வழங்கப்பட்டது டன் சில அடையாளம் காணப்பட்ட முதலீட்டாளர்களுக்கு ”எச்சரிக்கை கடிதம்” வழங்கப்பட்டது. | பல்வேறு இடுகைகளை மேலும் கண்காணிக்க வேண்டும். |

### 3.6 மனிதவளம், சம்பளக் குழு மற்றும் இடர் குழு கூட்டங்களை நடாத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெளியிடப்பட்ட தகவல்களின்படி, ஆணைக்குழு இடர் குழு மற்றும் மனிதவள மற்றும் ஊதியக் குழு என இரண்டு துணைக் குழுக்களை நியமித்துள்ளது. இருப்பினும், அந்தக் குழுக்களுக்கான குறிப்பு விதிமுறைகள் (TOR) காணப்படவில்லை. | இரண்டு குழுக்களுக்கான வரைவு TOR கள் ஆணைக் குழுவின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட TOR கள் காணப்படுதல் வேண்டும். |